சாட்சிகளின் வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் -23)

**உதவி அமர்வு நீதிமன்றம், பெருந்துறை.**

**அமர்வு வழக்கு எண்: 131/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் அ.சா. 4 ஆக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.எம்.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., உதவி அமர்வு நீதிபதி, பெருந்துறை அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது. பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | நாகராஜ் |
| த.க.பெயர் | சுப்பிரமணியம் |
| கிராமம் | பெருந்துறை |
| மாவட்டம் | |
| வயது | 53 |

| ஆஜர் எதிரிகள் | ஆஜரில்லாத எதிரிகள் |
|---|---|
| 1.ரகு (எ) மேட்டுர் ரகு<br>2.அரவிந்த் (எ) மச்சி அரவிந்த்<br>3.செந்தில்குமார் (எ) அரைப்பால் செந்தில்<br>4.கனகசபாபதி | |

நாள் 18.03.2026

அ சா 4 முதல் விசாரணை

நான் பெருந்துறையில் குடியிருந்து தச்சு வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சென்னிமலை போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பங்களை நான் எப்போது செய்தேன் என்றால் காவல் நிலையததில் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)**

கடந்த 18.12.2017 அன்று நானும் மகேஷ்குமாரும் பெருந்துறை காவல் நிலையத்திற்கு வந்த சென்று கொண்டிருந்தபோது சென்னிமலை போலிசார் சற்குண

ராஜா என்பவர் கொடுத்த புகார் சம்பந்தமாக மேட்டுர் ரகு (எ) ரகுவை பெருந்துறை போலிசார் போலீஸ் காவலில் எடுத்திருப்பதாகவும் அது சம்பந்தமாக சாட்சிகளாக இருக்க கேட்டுக கொண்டதன் பேரில் நானும் மகேஷ் குமாரும் சென்னிமலை காவல் நிலையத்திற்கு சென்றோம என்றும் அங்கு மாலை 4.30 மணியளவில் ரகு என்வர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாகவும் சாடசி மகேஷ்குமாா முன்பும் போலிசார் பதிவு செய்தனர் என்றும், பின்பு தன்னை அழைத்துச் சென்றால் மேவானி பக்கம் உள்ள தாலைக்கொம்புதுர் முனுசாமி தோட்டத்தில் வைக்கோல் போருக்கு பின்னால் மறைத்து வைத்துள்ள ஜீப்பை எடுத்து ஆஜர் செய்ததாகவும் முனுசாமி தோட்ட சாலையை அடையாளம் காட்டுவதாகவும் சொன்னதன் பேரில் போலிசார் ரகு மற்றும் எங்களை முனுசாமி தோட்டத்திற்கு அழைதது சென்றார் என்றும் அங்கு ரகு தோட்டத்து சாலையை அடையாளம் காட்டி பொலிரோ வாகனத்தை அடையாளம் காட்டினார் என்றும், பின்பு மாலை 6 மணிக்கு சென்னிமலை காவல் ஆய்வாளர் பார்வை மகசர் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார் என்றம் அதில் நானும் மகேஷ் குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் பின் வைக்கோல் போருக்கு பின் மறைத்து வைத்திருந்த பொலிரோ ஜீப் மற்றும் மேற்படி வண்டிக்குள் இருந்த அரிவாள் ஒன்றையும் இரும்பு கம்பி ஒன்றையும் போலிசார் மகசரில் கைபற்றியதாகவும் அந்த பார்வை மகசர் மற்றும் கைபற்றுதல் மகசரில் நானும் மகேஷ் குமாரும் சாட்சி கையொட்பபம் செய்தோம் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில் ) இல்லை

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.18 16:50:34 -1000

Assistant Sessions Judge,
Perundurai.

uploaded by SS